**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண். 4832/அ5/2025, நாள். .10.2025**

---

**பொருள்** : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ஆளுகையின் கீழ் செயல்படும் அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் – 2025 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் பள்ளி வளாகம் மற்றும் மாணவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் தூய்மையாக வைத்திருக்க கோருதல் மற்றும் உடனுக்குடன் விவரங்களைப் பதிவேற்றம் செய்யக் கோருதல் – சார்பு.

-----

வேலூர் மாவட்டம், வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ஆளுகையின் கீழ் செயல்படும் அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கவனம் ஈர்க்கலாகிறது. 2025 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் பள்ளி வளாகம் தூய்மைபடுத்துதல், விளையாட்டுதிடலில் மழைநீர் தேங்காமல் அவ்வப்போது அகற்றியும், மின் சாதனப்பொருட்கள் பராமரித்து மின்கசிவு ஏற்படாமல் பராமரித்தலும், மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் மழைநீர் அகற்றி தூய்மை பணியை மேற்கொண்டு பள்ளியினை முறையாக பராமரித்திட அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேற்காண் பொருள் சார்பாக எவ்வித தொய்வின்றி திறம்பட செயல்பட பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இப்பொருள் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தினந்தோறும் அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Sheet -ல் கொடுக்கப்பட்டுள்ள மூன்று நாட்களில் 15.10.2025 இன்று மாலை 5.00 மணிக்குள் உள்ளீடு செய்தும் மற்ற இரண்டு தினங்களில் (16.10.2025 மற்றும் 17.10.2025) நாள்தோறும் காலை 8.00 மணிக்குள் மறுநினைவூட்டு இல்லாமல் உள்ளீடு செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு** :

Google Sheet – 15.10.2025, 16.10.2025 மற்றும் 17.10.2025.

// ஒப்பம் //

**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)**

**வேலூர்.**

**பெறுநர்** :

அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

**நகல்** :

கோப்பிற்கு.

(பா.க)